**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திரு. P. பாலமுருகன்**, B.Com.,B.L.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), குளித்தலை,**

**2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.14/2022</u>**

ஸ்ரீ நாராயணதாஸ், கோவிந்ததாஸ் பிரைவேட் பேமிலி ட்ரஸ்ட் அதன் மேனேஜிங் டிரஸ்டி

D.நாராயணதாஸ் ..... வாதி

**//எதிர்//**

மதியழகன் ...... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 14.09.2023 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.காஜா மொய்தீன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினராகக் கொண்டும், வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் வாதி தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதியிடம் இருந்து 2020 - 2021ம் ஆண்டுக்கான குத்தகை நிலுவைத் தொகை ரூ.10,000/- மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்</u>**

1. தாவா சொத்தானது வாதி டிரஸ்ட்-ற்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தை பிரதிவாதி குத்தகைதாரர் என்ற முறையில் விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார். பிரதிவாதி பணப்பயிர் சாகுபடி செய்வதற்கு மட்டுமே சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் ஆண்டுக்கு ரூ.12/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது விலைவாசி உயர்வு காரணத்தினால் நெல் மற்றும் பணப்பயிர்களுக்கு செண்ட் 1-ற்கு ரூ.150/- வீதம்

முதல் ரூ.200/- வரை கோரப்பட்டது. இந்நிலையில் பிரதிவாதி எவ்வித ஒப்பந்தமும் செய்துக் கொள்ளாமல் வாழை, கரும்பு, எள் போன்ற பயிர்களை சாகுபடி செய்து வந்தார். தாவா நிலம் நல்ல பாசன வசதியும், வடிகால் உள்ள நிலமாகும். பிரதிவாதியின் செய்கையினால் வாதி டிரஸ்டிக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அக்கம் பக்கத்தில் உள்ள கிராம நிலங்களுக்கு சமூகம் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.121/2006 ல் 1412, 1413 மற்றும் 1415 பசலிகளுக்கு ஆண்டுக்கு ரூ.40/- என நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

2. பிள்ளாபாளையம் கிராமத்தை ஒட்டியுள்ள நிலங்களுக்கு 1418, 1419 பசலிகளுக்கு 2008 -2009, 2009 – 2010 ஆண்டுக்கு ரூ.50/- என நிர்ணயம் செய்து உத்தரவு ஆகியுள்ளது. செண்ட் 1 ற்கு ரூ.100/- முதல் ரூ.150/- வரை குத்தகை நிலவரம் உள்ளது. சமூகம் நீதிமன்றம் 1 செண்டிற்கு வருடத்திற்கு தற்கால விலைவாசி உயர்வு, பயிர்கள் விலை உயர்வு ஆகியவைகளை வைத்து பார்க்கும்போது குத்தகை தொகை மிகவும் குறைவானது. இருந்தபோதிலும் பிரதிவாதி மற்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்து வருவதால் செண்ட் 1 ற்கு ரூ.150/- கொடுக்க கடமைப்பட்டவர். பிரதிவாதி 1430 பசலிக்கு 2020-2021 குத்தகை தொகையும், நஷ்ட ஈடாகவும் செண்ட் 1 ற்கு ரூ.150/- வீதம் கொடுக்கவும் காலம் கடத்தி வருவதால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வாதி தரப்பில், வாதி நாராயணதாஸ் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 ஆக கணேசன் என்பவர் விசாரிக்கப்பட்டு ஆவணம் எதுவும் குறியிடப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை. பிரதிவாதி வழக்கின் ஆரம்ப நிலையிலிருந்து தோன்றாத்தரப்பினராக உள்ளார்.

4. பிரதிவாதியிடம் இருந்து 2020 – 2021ம் ஆண்டுக்கான குத்தகை நிலுவைத் தொகை ரூ.10,000/- மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களுக்கான 1429 மற்றும் 1430 பசலிகளுக்கான சாகுபடி அடங்கல் கணக்கு வா.சா.ஆ.1 ஆகவும், அசல் வழக்கு எண்.121/2006 ன்

தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், அசல் வழக்கு எண்.122/2006 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும், வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், தாவா சொத்திற்கான பட்டா கணிணி நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களின் மூலமாக வாதி தரப்பு வாதம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி வாதி தரப்பு வழக்கை மறுத்துரைக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தாமல் தோன்றாத்தரப்பினராக உள்ளார். எனவே தாவா சொத்தை பொறுத்து வாதி கோரிய குத்தகை நிலுவைத்தொகை வாதிக்கு கிடைக்கக்கூடியதென இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக**

இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்திற்கான 2020 - 2021ம் ஆண்டுக்கான குத்தகை நிலுவைத் தொகை ரூ.10,000/-ஐ வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டுமென்றும், மேற்படி தொகைக்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி முடிய ஆண்டொன்றுக்கு 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd/- P. பாலமுருகன்**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**
**குளித்தலை.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. நாராயணதாஸ் (வாதி)

வா.சா.2 திரு. கணேசன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | தாவா சொத்திற்கான 1429 மற்றும் 1430 பசலிகளுக்கான சாகுபடி அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | அசல் வழக்கு எண்.121/2006 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | அசல் வழக்கு எண்.122/2006 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.6 | தாவா சொத்திற்கான பட்டா கணிணி நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் - இல்லை**

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் - இல்லை**

**Sd/- P. பாலமுருகன்**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**
**குளித்தலை.**